**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 09** **நாள் : 09.01.2025**

**மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சென்னை பள்ளி மாணவர்களின் 100% தேர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களின் கல்விச்சுற்றுலாவினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, 2023-24ஆம் கல்வியாண்டில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சென்னை பள்ளி மாணவர்களின் 100% தேர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் விதமாக, ஆசிரியர்களின் கல்விச்சுற்றுலாவினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (09.01.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

கடந்த 2022-23ஆம் கல்வியாண்டிற்காக ஆகஸ்ட் 2023 மற்றும் செப்டம்பர் 2023 மாதம் கொடைக்கானல், ஏற்காடு, ஒகேனக்கல் மற்றும் American International School போன்ற இடங்களுக்கு 408 ஆசியர்கள் தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வாயிலாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக, மார்ச் 2024ஆம் ஆண்டு 10ஆம் வகுப்பில் 100% தேர்ச்சி பெற உறுதுணையாக இருந்த 282 பட்டதாரி ஆசிரியர்கள், 12ஆம் வகுப்பில் 100% தேர்ச்சி பெற உறுதுணையாக இருந்த 238 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் என மொத்தம் 520 ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் விதமாக திருச்சியில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM-Indian Institute of Management, Trichy) மற்றும் தேசிய தொழில் நுட்பக் கழகம் (NIT-National Institute of Technology, Trichy) ஆகிய கல்வி நிறுவனங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இன்று (09.01.2025) 175 ஆசிரியர்களும், 23.01.2025 அன்று 175 ஆசிரியர்களும், 30.01.2025 அன்று 170 ஆசிரியர்களும் தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வாயிலாக கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இந்நிகழ்வில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் திரு.த.விசுவநாதன் மற்றும் கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**